செய்தி வெளியீடு எண் :01 நாள் :01.11.2017

***தேனி மாவட்டம்,***
***வைகை அணையிலிருந்து முதல் போக பாசன நிலங்களுக்கான தண்ணீரை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் திறந்து வைத்தார்:-***

*********

தேனி மாவட்டம், வைகை அணையிலிருந்து முதல் போக பாசன நிலங்களுக்கான தண்ணீரை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே.ராஜு அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம்,இ.ஆ.ப., அவர்கள், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் ஆகியயோர் முன்னிலையில் இன்று (01.11.2017) திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசின் உத்தரவின்படி, கம்பம் பள்ளத்தாக்கு பெரியாறு பிரதானக் கால்வாய் பாசனப் பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன நிலங்களுக்கு நாள் ஒன்றுக்கு 900 கன அடி வீதம் 120 நாட்களுக்கு 6739 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பைப் பொருத்து இன்று (01.11.2017) முதல் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதன்மூலம், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே, வேளாண்குடி பெருமக்கள் நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.பொன்னம்மாள் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், திரு.வி.வி.ராஜன் செல்லப்பா அவர்கள், திரு.மாணிக்கம் அவர்கள், திரு.நீதிபதி அவர்கள், டாக்டர்.பரமசிவம் அவர்கள், திரு.சரவணன் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ஆனந்தி அவர்கள், பொதுப்பணித்துறை பெரியாறு வைகை வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு.குபேந்திரன் அவர்கள், உதவி பொறியாளர் திரு.செல்வம் அவர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**